# இறைவனின் அருள்நிறை குடும்பம்

இறைவனின் அருள்நிறை குடும்பம்
நம் மறைத்தளம் நம் மறைத்தளம்
மறையொளி வழங்கும் தீபமாய்
என்றும் வாழ்க அன்பில் வளர்க

**1**
இயேசுவின் பாதையில் இணைந்தே - நம்
அன்பையும் உறவையும் வளர்ப்போம்
மறைத்தள வாக்கினைக் காப்போம்
இறைபணி ஓங்கிடச் செய்வோம்
ஒன்று சேர்வோம் ஒளியைக் காண்போம்

**2**
சிலுவையில் எமக்காய் மரித்தார் - நம்
மீட்பரின் சாட்சியாய்த் திகழ்வோம்
அழைப்பின் மாண்பினை உணர்வோம்
உழைப்பை இறைவனுக்களிப்போம்
அருள் பெறுவோம் அன்பில் வளர்வோம்

**3**
வாழிடம் வேறிடம் ஆயினும் - நம்
மானிடர் யாவரும் ஓரினம்
உறவினை என்றுமே பகிர்வோம்
ஒற்றுமை தீபத்தில் ஒளிர்வோம்
கறை களைவோம் கைகள் இணைவோம்

**4**
நீதியும் நேர்மையும் நெஞ்சினில் - நாம்
நிறைவாய்க் கொண்டுமே வாழ்வோம்
ஆவியின் கருவியாய் மலர்வோம்
குறைகள் நீக்கிட முனைவோம்
வழி காண்போம் வாய்மை காப்போம்